
# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

மலர் 1 } விரோதி ஸு—மாசி மீ 1950 ஸு பிப்ரவரி மீ—மார்ச்சு மீ } இதழ் 11



MAHAMAHOPADHYAYA DR. U. V. S. LIBR BESANT NAGAR : MADR

தாரகாசுரன் வதை

(கந்தபுராணச் சித்திரவிளக்கம்—9)


வருட சந்தா ரூ. 1-8-0 ஆயுள் சந்தா ரூ 25-0-0

சித்திரை முதல் பங்குனி முடிய வருட சந்தா 1-8 0

## பொருளடக்கம் 362


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஸர்வோதய புண்ணிய காலம் | (திருப்புகழ் மணி) | ... 1 |
| 2. | கந்தர் கலிவெண்பா | (ரசபதி) | ... 3 |
| 3. | ஔவை பிராட்டியார் | (ஸ்ரீ வத்ஸன்) | ... 9 |
| 4. | கந்தரநுபூதி | (கு. தங்கவேலுத் தேவர்) | ... 13 |
| 5. | தடுங்கோள் மனத்தை | (என். எஸ். இராமச்சந்திர ஐயர்) | ... 17 |
| 6. | முழுச் சேவகன் | (சே. த. இராமலிங்கம் பிள்ளை) | ... 20 |
| 7. | செய்ந் நன்றி யறிதல் | (புலவர்-அரசு) | ... 25 |
| 8. | ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம் | (V. S. வேங்கடராமன்) | ... 30 |



அமிர்தவசனி வருட சந்தா ரூ. 1—8—0 அனுப்பவும் (வி. பி. இல்லை)


ஆயுள் சந்தா ரூ 25—0—0 (இருபத்தைந்து)



நூதன வர்ணப் படங்கள்

சைவ சமயாசாரியர்

நால்வர் ரூ 1-0-0



குமர குருபரன்

(முருகன்) ரூ. 1-4



சிவதாண்டவம் 14×20 ரூ. 1—8—0 அருணகிரிநாதர் ரூ. 1—8—0

160 பாடலடங்கிய திருப்புகழ்மாலை புத்தகம் ரூ. 0—8—0

அமிர்தவசனி காரியாலயம், 54. பந்தர் தெரு., சென்னை

சிறந்த பாராயணப் புத்தகங்களுக்கு

பி. டி. பாணி அண்டு கம்பெனி

17, வேங்கடாசல செட்டி தெரு., திருவல்லிக்கேணி.

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் 1 { விரோதி௵ மாசி௴ / பிப்ரவரி—மார்ச்சு 1950 } இதழ் 11

## ஸர்வோதய புண்ணிய காலம்

[திருப்புகழ் மணி]

"அருட்பெருஞ் ஜோதியில் உதித்ததோர் பேரொளி
காயந் தனிலுறைந்து ஜெகமெலாம் சேவைசெய்து
அகாய மாயவெட்ட வெளிதனில் கலந்து
ஜோதியாய் உலகெங்கும் அமர்ந்தனர் காந்தியே"

(புகழ்மணி வாசகம்)

இந்த ஸர்வோதய புண்யதினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்தியாவில் குடியரசு திட்டம் ஏற்பட்ட பிறகு, காந்தி மஹான் பரந்தை யடைந்த வெற்றியை கொண்டாடினர் முதன் முதலாக ஜனவரி மாதம் 30-ம்தேதி. வள்ளலார் நாதனைக் கலந்த உணர்ச்சியை உலகெலாம் நலம்பெற உபதேசித்தார்.

---

கச்சிப்பதிச் சொக்கப் பெருமானே
பொற்பதத்தைப் பெற்றிருக் கைக்குப் பெறுவேனோ

"நாதனைக் கலந்தேன்—சாகா பதம்பெற்றேன்
பேதமையொழிந்தேன்—தேவனு மானேன்
எந்தையைக் கண்டேன்—எங்குமாய் நிறைந்தேன்
பந்தனை தவிர்ந்தேன்—என்று உந்தீபற."

ஸர்வமும் ப்ரம்மம் என்று நேரூரில் ஜீவஸமாதியில் வைகும் ஸ்ரீ சதாசிவ ப்ரம்மேந்தரர் அவர்கள் உபதேசித்தார்.

"ஸர்வம் ப்ரம்ம மயம்—ரேரே
ஸர்வம் ப்ரம்ம மயம்"

ஸர்வத்வம் என்ற பண்பு நம் உணர்ச்சியில் வந்து விட்டால் ஜீவன்முக்திநிலை தானே வந்துவிடும்.

"சப்த ப்ரம்மமயி சராசரமயி ஜோதிர்மயி வாங்மயி
நித்யானந்தமயி நிரஞ்சனமயி தத்வம்மயி சின்மயி"

என்று ஆதிசங்கரர் பாடியுள்ளார்.

ஜகன்மாதா ஸர்வ ஸ்வரூபங்களில் எல்லாம் இருக்கின்றுளாம்.

எல்லாமுமாகி கலந்து நிறைந்தபின் அறிவுக்கும் ஞானத்துக்கும் குறைவு கிடையாது என்று பாரதியார் உபதேசித்தார். பட்டினத்தார் ஊனுக்குள் தெய்வமே நின்று விளையாடுகின்றது என்றும், எல்லா உயிரும் ஒரே உயிரொன்றும் ஒரே வாழ்வென்றும் பூரண மாலையில் பாடியுள்ளார். பேத அபேதமோடு உலகாய் வளர்வதும் ஒன்றுதான்; அதுதான் "நீ" என்பது என்று முருகனைப் புகழ்ந்தார் ஸ்ரீ அருணகிரியார். உலகெலாம் நிறைந்து நின்றது கடவுளென அறியாததால்தான் உலகம் துன்புறுகின்றது என்று சொல்கின்றுர் பாரதியார். ஆகவே நம் தேசம் செழிப்பாய், நன்றாய், சௌபாக்யத்தோடு இருக்க

---

பலநாளும் தட்டுப் பட்டுச் சுழல்வேனைச்
சற்றுப் பற்றக் கருதாதோ

வேண்டின், ஸர்வத்வம் என்ற உலகம் படர்ந்த அன்பும் சேவையுமாய் நமது நாட்டு மக்கள் விளங்கப்பெற வேண்டும். சித்தர் பாடியதுதான் ஸர்வோதயத்தின் உயிர்நிலை.

"ஒன்று மொன்றும் ஒன்றுமே
உலகனைத்தும் ஒன்றுமே
அன்றும் இன்றும் ஒன்றுமே
ஆனாதி யானது ஒன்றுமே"

இந்த ஸர்வத்வம் உதயமாகி உலகெலாம் அன்பினில் வாழ்க.

---

குமரகுருபரர் அருளிய

## கந்தர் கலிவெண்பா

(ரசபதி)

"ஐந்தொழிற்கும் அப்புறமாய் அன்றே
மனாதிகளுக்கெட்டாவடிவாய்—தனாதருளின்
பஞ்சவிதரூப பரசுகமாய் எவ்வுயிர்க்கும்
தஞ்சமென நிற்கும் தனிப்பொருளாய்."

(மனாதிகள்-மனம் முதலிய கரணங்கள்; தனாத-தன்னுடைய; பஞ்சவிதம்-ஐவகை; பரசுகம்-பேரின்பம்).

மூலமலக் குற்றம் ஆசையை மூட்டியுளது. அதனால், இன்றே வீடு தருகின்றோம் எனினும், அழுக்குடைய உயிர்கள் அதை விரும்புவது இல்லை. இதனை யறிந்து, செம்பை மாற்றுயர்ந்த பொன்னாக மாற்றும் இரசவாதி

---

செப்பச் செப்பப் பச்சைப் பச்சைச்
செச்சைச் செச்சைக் கழல் தாராய்

போல், இனிய திருவருளால் நச்சும் வழியில் உயிர்களை நடத்தி, அநுபவ வாயிலாக அந்த ஆசையை யகற்றி, வீடடையச் செய்கின்றான் விமலன்.

> 'வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்
> மெய்ந்நெறி கண்டாய், விரதமெல்லாம்
> மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
> மறைக் காட்டுரையும் மணாளன் தானே.'

என்ற தமிழ்மறை யிங்கு நினைக்கத் தகும்.

காரண மாயையின் கட்டினால் மறதி விளைந்து, இன்பத்தை உயிர்கள் இழந்திருக்கின்றன. அறியாமையில் அழுந்தியுள்ள ஆன்மாக்களை, குற்ற மகற்றி ஆட்கொள்ள ஐந்தொழில் புரிகின்றான் அமலன்.

உயிர்களுக்கு மூலமான நுண்மை உடலையும், பருமை யுடலையும் உண்டாக்கும் முதற்செயல் படைப்புத் தொழில் எனப் பெறும். அசைக்க அசையும் ஆக்கையால் கருவிகள் தொழிற்பட்டு, உணர வேண்டியவற்றை உணர்ந்து வாழ, உண்டாக்கும் உடல் கரணம் உலகம் அனைத்தும், இடையில் கெடாதபடி அவ்வப்பொழுது அருள் செய்யும் அடுத்த செயல், காக்கும் தொழில் எனப் பெறும்.

உதித்ததும் மின்போல் ஒழியாதபடி, படைத்தவைகளை வினையளவாக நிறுத்தி வளர்ப்பதும், செய்த பிழை காரணமாக சிறைப்பட்டவர்க்கும் செங்கோல் மன்னன் உணவளிப்பதுபோல், தீவினை செய்துள சீவர்க்கும் மழை பெய்வித்தல் முதலிய பெருஞ்செயல் மூலம் உணவளித்தல் முதலியவையும் காத்தலில் அடங்கும்.

---

சுமை பேணும் சிக்கற் றுட்குக் கருணைசுத்தச்
சித்தித் தமிழைத் திட்டத்துக்குப் புகலப் பெறுவேனே

தோன்றாத் துணையான இறைவன், தம்மைக் காக்கும் கருணையைக் கருதாமல், இழிந்த இச்சை, உடலுறு பல பிணி முதலியவற்றால் வருந்தும் உயிர்கள், இளைப்பாறி யிருக்கும் பொருட்டுச் செய்கின்ற மூன்றாம் செயல், அழிப்புத் தொழில் எனப்பெறும்.

பகல் முழுதும் தொழில் செய்தோர், அயர்ச்சி மிகுந்து ஒரு தொழிலும் செய்யாமல் உறங்கி யிருக்க விரும்புவர். அதுபோல், உயிர்கட்குக் கிடைத்த மாயா காரிய உடல் கரணம் முதலியவை மெலிவடையும் நிலையில், எச்செயலும் செய்ய இயலாமல், வாளா இருக்க எண்ணும் காலமும், சங்கார காலம் என்பதில் அடங்கும்.

மேலும், உயிர்களையும், எஞ்சிய செயல்களையும் மாயா காரணத்தில் அணுக்கள் போல ஒடுக்குதல், சங்காரம் என்று சொல்வதும் உண்டு. படைப்பைப் பகல் என்றும், துடைப்பை யிரவென்றும், பாவ மூல அழிவே பரிசுத்தம் என்றும், தத்துவக் களைவே தனியின்பம் என்றும் தக்கோர் கூறுவர்.

ஒருவன் தன்னுடையது என்று கொண்ட வீட்டிற்கு அமைந்த எல்லை மதில்போல, வினைகளில் தேவையான வற்றை அநுபவிக்க, அவைகளை நினைவில் வருவித்து நிறுத்தல், நான்காம் செயலான மறைப்புத் தொழில் எனப் பெறும்.

இருமுகமும் நேர் நிற்கும் தராசின் இரு தட்டைப் போல், இன்பத்தில் மகிழாமை, துன்பத்தில் வருந்தாமை யெனும் சமநோக்கம் பிறந்த அந்நிலையில், அரியனாய் வந்து,

---

இனிவிட வேதாந்த பரமசுக வீடாம் பொருள்
இதவிய பதாம்புயம் அருள்வாயே

ஐம்மலமும் போக்கி, அச்சம் இல்லை இனி உனக்கு என உபதேசிக்கும் ஐந்தாம் செயல், அருளும் தொழில் எனப் பெறும். தொழில் நிகழ்கின்றது. ஆனால், அவைகளை நடத்துவிக்கும் மூல முதல்வன், புறக்கண்களுக்குப் புலனாம்படி தோன்றுவதில்லை. என்ன வியப்பு?

தைசச அகங்காரமும், சாத்துவிக குணமும் சமமாகக் கூடிப் பிறக்கும் மனமும், சாத்துவிகம் மிக்க நிலையில் உதிக்கும் புத்தியும், முக்குணமும் சமப்பட்ட நிலையில் முகிழ்க்கும் சித்தமும், புத்தியில் பிறந்து மூன்றாகப் பகுக்கப் பெறும் அகங்காரம் எனும் அந்தக் கரணங்களும், இடையறாது முயல்கின்றன.

நினைப்பின் நிலையம் மனம்; சிந்தித்த லுடையது சித்தம். போத நிலையில் எழுவது புத்தி. பெயர் நிலையில் வேறுபடுவதுபோல, செயல் நிலையிலும் இவைகள் ஒன்றினொன்று சிறிது சிறிதாக வேறுபட்டு முன்னேறுவன. இது என்றுமுள நிகழ்ச்சி.

அவைகள் எப்படி முயன்றாலும் புரியும் ஐந்தொழிலும் புரிவதன்றி, புரிவானைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. எவன் ஆணையால் ஐந்தொழிலும் நிகழ்கிறதோ, அவன் மனமாதி கரணங்களாலும் எட்ட இயலாதவனாக இருக்கின்றான். மற்று தொழிற்படுத்தும் கருவிகள் இல்லையானால், எதுவும் தொழிற்படுவது இல்லை. ஆதலின், கருவிகளாக இருக்கின்றார் ஐவர். அவர்களைப்பற்றி சிறிது சிந்தனை செய்வம்.

இந்த படைப்பாதி தொழில் புரிய ஐவர் படைக்கப் படுவர். பிரம, விஷ்ணு, ருத்ரன், மகேசன், சதாசிவம்

---

மவுன பூரித சத்திய வடிவினை
மாயா மற்குப் புகல் வரயே

எனும் பெயர்களை யுடைய இவர்கள், நிட்கள சிவத்தின் அம்சமாய், சாக்ரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியா தீதம் எனும் ஐந்து அவஸ்தைகளை யடைவர். அன்னோர் தங்கியுள தலங்கள் ஐந்து. சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை யென்பன, அத்தலங்களின் பெயர்கள். மண், நீர், நெருப்பு, காற்று, விண் எனும் ஐம் பெரும் பூதங்களும் அவர்களுடைய தத்துவங்கள். அத்த ஐவரையும் படைத்து, அவர்களிலிருந்து ஐந்தொழிலையும் நடத்துகின்றது திருவருள். எனவே, விசாரணையில், அவை கள், மூல இறைவன் தொழில்களாய் முடியும்.

## பயன்

பருவுடலுடைய உயிர், அதன் உள்ளுறையான நுண்ணுடலை எய்தி, அதன்பின் நுண்மையின் உள்ளுறை யான காரண உடலை எய்தி, அங்கங்கு மூலமலத்தில் பதிந் திருந்த தன் அணுத் தன்மை யின்னவகையென உணர்ந்து உணர்ந்து, அவ்வுணர்வில் அழுந்தி யழுந்தி, மல இருளொடு கலந்த தன் முனைப்பினின்றும், வினை அநுபவத்தினின்றும், உடலான மாயா மலத்தினின்றும் தேய்ந்து தேய்ந்து, ஒப்பற்ற பரம்பொருள் உண்மையை உள்ளபடி எய்தும். இதுவே படைப் பாதிகளின் அகப்பட்ட உயிர்கள் பெறும் பேறு.

'சென்று சென்றணு வாய்த் தேய்ந்து
தேய்ந் தொன்றும் திருப்பெருந்துறை
யுறை சிவனே'

என்ற திருவாசகம் இங்கு நினைக்கத்தகும்.

உயிர்களுக்கு இப்பேறு நிகழ்வதன் பொருட்டு தலைவர் ஐவர்களைத் தந்து, அவர்களிலிருந்து தொழில் நடத்தி,

---

பாவுத்துக்குத் தக்கவை பற்றித் திரியாதே
பாடப் பத்திச் சித்த மெனக்குத் தரவேணும்

தொழிலிற்கும் தலைவர்க்கும் தனக்கும் ஒரு தொடர்பிலன் போல், அவைகட்கும் அவர்கட்கும் அப்பாற் பட்டு நிற்கும் அம்மான் நம் முருகன் என்பதை நினைக்கிறபோதே நம் நெஞ்சம் நெகிழ்கிறது.

உணர்வின் நெகிழ்வொடு,
'தஞ்சம் தஞ்சம்; சிறியேன்மதி
கொஞ்சம் கொஞ்சம் துரையே அருள்'

என்று குரல் கொடுத்தால், இனிய மெய்ப்பொருளாம் அந்த இறைவன், எத்துவார் எதிரில் இருக்கின்றான். தொழில் காணாத தொல்லோன், தொழிலுடையார் காணாத அந்த தரும துரை, எளிமைப்பட்டு எத்துவார் எதிரில் எழுந்தருள்கின்றதென்றால், உய்திக்கு அஃதொன்றே வழி என்று நாமும் உணரலாம் அல்லவா!

"ஐந்தொழிற்கும் அப்புறமாய்—அன்றே
மறைகளுக் கெட்டா வடிவாய்—தனதருளின்
பஞ்சவி சரூப பரசுகமாய்—எவ்வுயிர்க்கும்
தஞ்சமென நிற்கும் தனிப் பொருளாய்."

என்று இவைகளையெல்லாம் எண்ணி, எவ்வளவு குதூகலத்தொடு பாடுகின்றார் குமர குருபரர்!

'படைக்கப் பங்கயன் துடைக்கச் சங்கரன்
புரக்கக் கஞ்சைமன் பணியாகப்
பணித்துத் தம்பயம் தணித்துச் சந்ததம்
பரத்தைக் கொண்டிடும் தனிவேலே'

என்று இதே செய்தியை ஸ்ரீ அருணகிரிநாதர் எவ்வளவு ஆர்வத்தொடு பாடுகின்றார் பாருங்கள். இப்பாடலைப் பிறர் பாடவைத்துக் கேளுங்கள். அப்போது தெரியும் அந்த ஆனந்தம்.

---

நித்தாரம் எதெனப் பாத பத்ம
நற் போதையே தரித் தருவாயே

# ஔவை பிராட்டியார்.

[ஸ்ரீவத்ஸன்]

ஔவைப்பிராட்டியார் அருளிச்செய்த வாக்குண்டாம் என்ற செய்யுளுக்கு நூல உரை 8-வது சஞ்சிகையில் 24-வது பக்கத்தில் கூறப்பட்டது அச்செய்யுளின் உட்கருத்தைச் சற்று கவனிப்போம்.

ஐங்கரனும் முன்னவனுமாகிய தும்பிக்கையான் பாதம் அர்ச்சித்துச் சரணம் அடைபவர்கட்கு, வாக்கு, மனம், இலக்குமி அருள், ஆயுள் ஏற்படும் என்று கூறியதின் நோக்கம்தான் என்ன? பிராட்டியார் பாடியுள்ள ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் பாட்டுக்களின் தலைப்புச் செய்யுட்களில் "ஆதிநாயகன் அடியிணை ஏத்தி ஏத்தித் தொழுவோம்" என்றும், பிறகு நல்வழியில் தமக்கு சங்கத்தமிழ் மூன்றும் கேட்ட இவர் அம்மாதிரி வேண்டுகோளை இச்செய்யுளில் வேண்டவில்லை; ஆனால் அவ்விதம் தொழுபவர் எவரும் அடையக்கூடிய லாபம் என்னவென்பதைத் தெரிவிக்கிறார்.

இனி வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் என்று சொன்னதின் நோக்கம் அல்லது உண்மைதான் யாது? பிரகதாரணிய உபநிடதத்தில், முதலில் ஈசன் ஒரு புருடனை சிருட்டித்தார். அந்தப் புருடனுக்கு முதன்முதலாக மூன்று உறுப்புக்களை அமைத்தார். அவை வாக்கு, மனம் பிராணன் என்பதாக கூறப்பட்டிருக்கிறது. வாக்கு, மனம், பிராணன் இம் மூன்றும் பிருதிவி அப்பு தேயுவின் நிலைகள் என்றும் இம்மூன்று நிலைகளும் சேர்ந்தே ஒரு

---

பொற்பதமக் கழல் சேர்வார் தங்குழாத்தினில்
என்னையும் அன்பொடு வைக்கச் சற்றுக் கருதாதோ

சிருட்டி அல்லது பிறவி (சனித்தல்) ஏற்படக் கூடும் என்று மற்றய உபநிடதங்களும் கூறுகின்றன. ஆங்கிலத்தில் கூறப்படும் பழமொழி, இம்மனிதன் என்பவன் உப்பு, கந்தகம், ரசம் என்னும் உருப்புகளாலாகியவன் (Man is made of salt (Earth Element) Sulphur (Fire Element) and Mercoury (Water Element) என்பதும் நினைவுக் குறியது. இம் மூன்றும் அமையாத சீவன் கிடையாது. ஐம்புலன்களில் காது, மூக்கு, நேத்திரம் இவைகள் ஒழுங்காக அமையப்பெற்ற சீவன்கள் இருக்கலாம். அல்லது அந்த உறுப்புகள் அமைந்தும் அதன் பொறிகளை (தொழில்களை) செய்ய இயலாமலிருக்கலாம். (கண் இருந்தும் பார்க்க இயலாமலும் காது இருந்தும் கேட்க இயலாமலும் இருக்கலாம்). ஆனால் வாய் இல்லாத பிராணியும் உண்டோ? அவ்வாயினுள் நாக்கு இல்லாத பிராணியும் உண்டோ? ஆகவே வாக்குப் புறப்பட ஏதுவான வாய் அதி முக்கியம் என்று தெரிய வருகிறது. ஆனது பற்றியே எல்லா சீவராசிகளும் நல்ல வாய் படைத்ததாக இருக்கவேண்டும் என்கிறார் பிராட்டியார். இத்த வாய் என்பது ஒரே உருப்பாகத் தோன்றினும் உண்மையில் அஃது மேல் கீழ் உதடுகள், பற்கள் இருவரிசை, உள் நாக்கு, வெளி நாக்கு இவைகள் யாவும் சேர்ந்ததே ஆகும். மேற்கண்ட வாயின் உறுப்புகள் யாவும் செவ்வையாக அமையப் பெற்றிருப்பதுடன், நோய்கட்குட் படாமலும் இருந்தாலன்றி, அதனின்று புறப்படும் வாக்கு, தொனி, நாதம், சப்தம், அல்லது சொல், இயற்கையாயிராது. இவையாவும் சீர்குலையாமலிருந்தாலன்றி நல்வாக்கு உண்டாகாது.

---

காலனுடல் போடத் தேடிவரு நாளிற்
காலை மறவாமற் புகல் வேனோ?

மனமுண்டாம் :— இரண்டாவதாக வாயும் அதைச் சார்ந்த உருப்புக்களும், இயற்கையாகவும், நோயற்றதாகவும் அமையப் பெற்றிருந்தும் அதனின்று புறப்படும் நாதம் அல்லது சொல் இன்சொல்லாக இராமல், வன்சொல்லாக இருப்பின் யாது பயன்? அத்தகைய சொற்கள் இன் சொல்லாக அமைய மனம் செம்மையாக அமைதல் வேண்டும் என்கிறார் பிராட்டியார்.

ஐம்புலன்களின் தொழில்களை நடத்துவிப்பது மனம். மேலும் வெண்மை, பசுமை என்றும் தீர்மானம், சந்தேகம், நம்பிக்கை, சலனம், வைராக்கியம், அவமானம் புத்தித் திறமை, பயம் இவை யாவையும் நிர்ணயித்தல் மனதைச் சார்ந்தது.

இந்த மனம்தான் எங்குளது? இச்சரீரத்தில் சிலர் மனதிற்கிருப்பிடம் இருதய கமலம் என்றும், சிலர் மூலா தாரம் என்றும், சிலர் சகஸ்ராரம் (சிரம்) என்றும், சிலர் கண்டத்தில் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் வைத்திய சாத்திரத்தில் மனதிற்கும், சிரத்திலுள்ள சிறுமூளை, பெரு மூளை கட்கும் ஓர்வித சம்பந்தம் ஏற்படுத்தி, மேற்கூறிய மூளைகளும் அதைச் சார்ந்த உறுப்புகளும் நோயற்றதாக இருந்தாலன்றி, மனம் செம்மையாகவும் இயற்கையாகவும் இராது என்று சொல்லுகிறார்கள். இதற்குச் சான்றுகள் தேவையில்லை. கிறுக்குப்பிடித்தவர்க்கு, மூளைக்கோளாறு என்பதை யாவரும் அறிவார்கள். மேலும் மனம் செம்மை யாக இருக்க வேண்டு மானால் பிராணநிலை ஒழுங்காக இருக்க வேண்டும என்றும் சொல்லியிருக்கிறது.

---

அருணை நகர்மிசை கருணையொடு அருளிய
பரம ஒரு வசனமும் இரு சரணமும் மறவேனே

பிராணநிலை :—அதாவது பிராணன் என்பது மூச்சு அல்லது உயிரென்றும், இதன் இயற்கைத்தன்மை உஷ்ணம் என்றும், இந்த உஷ்ணநிலை இயற்கையாயிருப்பதும், மாறுபடுவதும் ஆகாரபேதத்தினால் என்றும் சித்தர்களும் உபநிடதத்தில் கண்ட மாமுனிவர்களும் கூறுகின்றனர்.

ஆதி சங்கரபகவத் பாதாளும் சரீரத்தில் இயற்கையாகவுள்ள ஓர் சூடு, ஆகாரத்தாலேற் படும் ஓர் வலிவு அல்லது சத்தியே பிராணன் என்கிறார். இந்த வலிவு அல்லது சக்தி ஒழுங்கான நிலையில் இருக்க மூலகாரணம் ஆகாரம் என்றும், அந்த ஆகாரம் சேணிக்கும் கருவிகள் நோயற்றதாக இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். தற்கால விஞ்ஞான ஆராய்ச்சியாளரும் இதையேதான் தெரிவிக்கிறார்கள். மேலும் சாந்தோக்ய உபநிடதத்தில் கூறியுள்ளதைச் சற்று கவனிப்போம் :—

நாரத மாமுனி எல்லாம் அறிந்தவராயிருந்தும் தவமணியாகிய சனத்குமாரரை அடைந்து வணங்கி ஹே : தேவ ; இருளின் அக்கரையை அடையும் உபாயத்தினை உரைப்பீராக என வேண்டினார். சனத்குமாரரும், ஹேமுனிபுங்கவா! சாவதானமாக கேட்பீராக! எவனொருவன் சுத்தமான ஆகாரத்தினை உட்கொள்கிறானோ அவனது மனம் சாத்வீகத்தை அடைகிறது. எவனது மனம் சாத்வீகத்தை அடைகிறதோ அவன் இருளின் எல்லையைத் தாண்டியவனாகிறான் என்று போதித்தார். இனி ஆகாரமென்பது எது, அதிலும் சுத்தமான ஆகாரம் எது என்பதைப் பற்றி, அடுத்த (சஞ்சிகையில் கவனிப்போம்).

---

# கந்தரநுபூதி

[கு. தங்கவேலுத்தேவர்—அம்பராம் பாளையம்—
புள்ளாச்சித் தாலூகா].

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

(இ-ள்) எதிரியைத் தானகத் தேடிச் செல்லும் அகங்காரங்கொண்ட யானைமுகாசுரனை யுத்தத்திற்கொன்ற விநாயகக் கடவுளது தம்பியாகிய, ஏ! ஷண்முகா! ஆடுகின்ற குதிரை யென்கிற உனது வாகனமாகிய மயில், வேல், அழகிய சேவல் என்று பாடுந் தொழிலே அடியேனுக்குத் தொழிலாக அருள்புரிவாய் என்பதாம்.

இவ்வாறு பொதுப்பட உரை கூறினும், மயிலும், வேலும், சேவலும் சொல்லளவிற் பாடுவது, தான் ஒரு பக்தன் என்ற வேஷமாகவோ அல்லது ஜீவனோபாயத்துக்கு வழியாகவோ பயன்படுவதன்றி, உண்மையானந்த நிலையெய்தல் என்பது அத்திமலராகவே அநுபவத்திற் காணலாமாதலால், அருணகிரிநாதர், வேஷமாகவோ ஜீவனோபாயமாகவோ அல்லது மதயானையை அனுசரிக்கவோ, அடக்கவோ கருதி அநுபூதி ஒருக்காலும் செய்திருக்கமாட்டார். ஆயின், இவ்வாறு சொல்வதற்கு அநுபூதிக்கு இன்றியமையாத 'சிவயோக மென்றுங் குருத்தை யறிந்து முகமாறுடைக் குருநாதன் சொன்ன கருத்தை மனத்திலிருத்துங் கண்டீர் முத்தி கை கண்டதே' என்று கந்தரலங்காரத்

---

அருணை நகர்மிசை கருணையொடு அருளிய
மவுன வசனமும் இருபெரு சரணமும் மறவேனே

தில் ஸ்வாமிகளே சொல்லியிருக்கிற படியால், இவ்வநுபூதி யின் கருத்தையும் நம் சிற்றறிவினுக் கெட்டியவரை ஆராய வேண்டியது அவசியமாவதால் சிறிது ஆராய்வாம்.

மயிலைச் சொல்லும்போது ஆடும் பரி என்றும், வேலைச் சொல்லும்போது அடைமொழியில்லாது தனியாக வேலென்றும், சேவலைச் சொல்லும்போது அணிசேவல் என்றும் அருள்செய்த கருணையும் கருத்தும் கவனிக்கற் பாலது. அதாவது ஆனந்த நிலை விரும்பும் அன்பர்கட்குத் தோன்றாத் துணைகளாகவுள்ள பிரமசரியம் (பெண்ணாசை நீத்தலும்) சோம்பலின்மை (ஜாக்கிரதையுடன் முயற்சித்தல்) ஆகிய இருகுணங்களும் இருந்தால்தான் ஆனந்த நிலை யெய்துவது சுலபம். இவ்விருகுணங்களும் இல்லையாயின் ஞானம்கெடும் என்பதைச் சூசிப்பிக்கின்றார். எவ்வாறு? ஆடும்பரி பெண்சேர்க்கையில்லாத பெருங்குணத்தால் ஆனந்தமெய்தி நடனமாடுங்குதிரை (என்று பெருமை கொண்ட உனதுவாகனமாகிய மயிலும்), வேல்-ஆன்றோர் களால் விரும்பப் படுகின்ற மேதை என்கிற ஞானநாடியே நினது ஆயுதமாகிய பராசக்தி—வேலும், அணிசேவல்— உலகமெல்லாம் மகாவிருள் மூடிமயங்குங்காலத்து தான் மாத்திரம் ஜாக்கிரதையுடன் விழிப்படைவதோடு நில்லாது ஜீவர்களும் சோம்பலையகற்றி ஜாக்கிரதையுடன் கடவுளைத் தொழுங்கள் என்று கருணையுடன் பறை சாற்றி நினைவூட்டு வதேபோல் தனது சிறகுகளையடித்து ஓ-அர-ஓ-ஓ-என்ப தாக ஓங்காரத்தை முன்னும் பின்னும் வைத்து மத்தியில் சர்வ இருளையும் போக்கவல்ல ஈசுவர நாமத்தை வைத்தும் கடைசியில் எல்லாம் பிரணவமயம் என்பதுக்

---

பரியகைப் பாசம் விட்டெறியும் அப்போதெனைப்
பரிகரித் தாவியைத் தரவேணும்

தோன்றப் பிரணவத்துக்கு அளபெடைகொடுத்து நீட்டியும் கூவுகின்ற பெருங்குணத்தால்—உனது உபதேச ரகசியத்தின் சின்னம் (கொடி) ஆகக் கொண்ட அழகிய சேவல் என்கின்றார். ஆதலால் பிரமசரியமும் சோம்பலின்மையுமான இரண்டு குணங்களும் முன்னும் பின்னும் அரணாக விருந்தாற்றான் மேதா நாடிதழைத்தோங்கும் என்பதை வலியுறுத்தவே இவ்வாறு அருள் செய்தார் என்பது அடியேனது சிற்றறிவின் முடிவு.

ஆதலால் அதற்கிணங்க, சகோதரனே! உலக மாயையென்னும் பெரிய சமுத்திரத்தினின்றுங் கரையேற்றி ஆட்கொள்ள வல்ல-எ-குருநாதா! அன்பர்கள் ஆனந்தநிலை தேடிச் செல்லும் பாட்டையில் பெருந்தடையாகப் பெண்ணாசையானது தேடுங் கயமாம் (விளக்கைப்பற்றிக்கிணற்றில் வீழ்தல் என்னும் பழமொழிபோல) பெரிய குளம்போலுங்குறுக்கிடுகின்றதே! (ஆதலால் அப்பெண்ணாசையும்) முகனைச் சாடுந் தனியானை—(ஆன்ம கோடிகளின்) முகத்தைச் சஞ்சலத்தால் வாட்டி ஆனந்த நிலைக்குச் செல்லும் முயற்சியைத் தடுக்கும் சோம்பலென்னும் மதயானை குறுக்கிடுகின்றதே. ஆதலால் அச்சோம்பலையும் விலக்கி அடியேன் ஆனந்தநிலையெய்த அசக்தனானதால், ஆடும்பரி-பிரமசரியம் காக்கும் உமது வாகனமாகிய மயிலையும், வேல்—ஜீவர்களின் ஆனந்த நிலையின் வித்தாம் மேதா நாடியாகிய உமது ஆயுதமென்னும் வேலையும்—அணி சேவல்—எந்த இருளினும் சோம்பலினால் தன்னை மறந்து ஏமாறாத உனது கொடியாகிய சேவலையும் பாடும் பணியே—அடியேன் பிரம சரியம், ஆனந்த நிலை, சோம்பலின்மை என்னும் முக்

---

ஓறுவினைக்கே உளத்து அறிவுகெட்டேன் உயிர்ப்
புணையிணைத் தாள்தனைத் தொழுவேனே

குணங்களின் அவாவினுல் அக்குணங்களைக் கொண்ட மயில், வேல், சேவல் என்ருவது இடைவிடாது பாடித் தோத்தரிக்கும் தொழிலையே—'ணியாவருள்வாய்—தொழிலாக வருளியாட்கொள்ள வேண்டும் என்பதாம்.

இதில் உலக மாயையை விலக்கக் குரு நாதனுல் முடியும் என்பதனை 'பேற்றைத் தவஞ்சற்றுமில்லாத வென்னைப் பிரபஞ்ச மென்னும் சேற்றைக் கழிய வழி விட்டவா' என்றும் முத்தியை விரும்புவார் வேலையும், மயிலையும், காலையும் (காலினுல் வெற்றிகொள்ளும் சேவல்) போற்ற வேண்டும் என்பதனைப் ;

"பாலென் பதுமொழி பஞ்சென் பதுபதம் பாவையர்கண்
சேலன் பதாகத் திரிகின்ற நீ செந்தி லோன்றிருக்கை
வேலென் கிலைகொற்றமயூர மென்கிலை வெட்சித் தண்டைக்
காலென் கிலைமன மேயெங்ஙனேமுத்தி காண்பதுவே."

என்றுஞ் சொல்லி யருள்கின்ருர். தவிர இவ்வனுபூதியுள் முகம், கை என்ற கிலைமொழி வருமொழிகள் முகனை என்பதாகப் புணர்ந்தமை—

" இடையுரி வடசொலினியம்பிய கொளாதவும் போலியு மரூஉவும் பொருந்திய வாற்றிற்கு இயையப் புணர்த்தலியாவாக்கு நெறியே என்ற புறநடைச் சூத்திரம் கவனிக்கற்பாலது.

அறுமுகனருளால் அநுபூதி வளம் ஓங்குக !

சுபம்.

---

பிழைபொறுத் தாயெனப் பழுதறுத் தாளெனப்
பிரியமுற் ருேதிடப் பெறுவேனே

# தடுங்கோள் மனத்தை

[என். எஸ். இராமச்சந்திர ஐயர், ஆனைமலை ரோட்.]

நம் மனமானது எப்பொழுதும் ஏதோ வொன்றைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கும் இயல்பினை உடையது. துயிலுகையிலுங்கூட அது அநேகமாக வேலை செய்வதுண்டு. அப்பொழுதுதான் கனவுகள் தோன்றுகின்றன. ஒரே இடத்தில் அது நிலைத்திருத்தல் மிகவும் அரிது. ஒரு விஷயத்திலிருந்து இன்னொரு விஷயத்திற்குத் தாவிக் கொண்டேயிருக்கும். ஆகையால் அதனைப் பெரியோர்கள் குரங்கிற்கு ஒப்பிட்டிருக்கின்றனர். பல்வகை எண்ணங்களை எண்ணிக்கொண்டிருப்பது தான் அதன் முக்கிய தொழிலாக இருக்கின்றது.

அது வெளிக்கிளம்ப ஐந்து வாயில்கள் இருக்கின்றன. மெய், வாய், விழி, நாசி, செவி என்னும் ஐம்பொறிகள் தான் அந்த வாயில்கள். இவைகளின் வழியாக அது ஊறு, சுவை, ஒளி, நாற்றம் ஓசை என்பவைகளை நோக்கி வலுவுற்ற அவாவடிவத்தில் சதா வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்படி மனமானது ஆசாரூபமாக வெளிக்கிளம்பிக் கொண்டிருப்பதால் அதன் சக்தி வியர்த்தமாகின்றது.

இதனாற்றான் நம்மிடத்தில் புதையுண்டு கிடக்கும் தெய்வீக இயல்புகள் வெளிப்படாமல் இருக்கின்றன. பொறி வாயிலாகச் செல்லும் மனத்தை அடக்கி ஓர் இடத்தில் ஒருமைப்படுத்த முயலுவோமாயின், ஞானக்கனல் ஒளி வீசத் தொடங்கும். சூரியனது கிரணங்களை ஒரு கண்ணாடியின் (லென்ஸின்) வாயிலாக ஒன்றுபடுத்திக் குவிக்கப்படும் பொழுது அதன் அடியில் வைத்திருக்கும் காகிதத்தில் எவ்வாறு நெருப்புப் பற்றுகின்றதோ அவ்வாறே அவாவடிவமாகச் சிதறுண்டுபோகும் மனத்தை முருகப்பிரான் திருக்கழலைப் புகலிடமாகப் பற்றி அதன்கண் ஒருமைப்படுத்தி

---

மகுடமணி வாரி சைக்கும் விகடமத லாவு சிதா
மயிலின் மிசை யேறி நித்தம் வரவேணும்

ஞல் இதய குகையில் சோதிச்சுடர் மிளிர்வதைக் காண லாம். உய்யவும் செய்யலாம்.

"கைவாய் கதிர்வேன் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவாய். யொழிவாய்
மெய்வாய் விழிநா சியோடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெல் லுமவா வினையே."

என்பது அருணை அடிகளின் திருவுபதேசமல்லவா!

"இன்ப மிடையறு தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்."

எனத் திருவள்ளுவரும் மொழிந்துள்ளார்.

ஆகையால் அவாவினை அறுத்தல் ஆன்மப் பிரகாசத் திற்கு இன்றியமையாதது. அதற்கு மனத்தை விஷயங் களிற் செல்லாமல் தடைசெய்ய வேண்டும். ஓடித் திரியும் நெஞ்சை ஓடாமல் அடக்குவதற்குப் பற்பல சாதனைகள் ஏற்பட்டுள்ளன. ஜபம், தோத்திரம், பாராயணம், அர்ச் சனம், கீர்த்தனம், பஜனம் முதலியவைகள் சிறந்த சாதனை களாகும். இச்சாதனைகளெல்லாம் பலவிதமாக விருந்தா லும், இவை யனைத்தும் மனோலய சித்திக்கான மார்க்கங் களே. இவைகளால் அடையத் தகுந்ததும் மனோலயமே. ஆற்றில் குளித்தேனென்றும், குளத்தில் குளித்தேனென் றும், வீட்டிலேயே குளித்தேனென்றும் ஜனங்கள் பொது வாகச் சொல்வதை நாம் கேட்கின்றோம். தண்ணீரில் குளித்தேனென்றும் உண்மையை ஒருவரும் எடுத்துரையா விடினும், குளித்தது, தண்ணீரிலல்லவா ? அதுபோல ஜபம் செய்தேன் என்றாலும், பாராயணம் செய்தேன் என்றாலும், பஜனம் செய்தேன் என்றாலும் எல்லாம் மனோலயமடைய முயற்சித்தேன் என்பதுதான் பொருள்.

நாம் வழக்கமாக அப்பியசித்து வரும் சாதனைகள் அனைத்தும் மனத்தைத் தடுத்து நிறுத்த உதவாவிடில், அவை

---

தாழ்வினுயிர் வீழ்பட் டேழ்வினைவி டாமற்
சாவதன்மு னேவற் கொண்டிடாயோ

கள் வீண் ஆடம்பரங்களாகவே பரிணமிக்கும். அகந்தையை உபரியுபரி வளர்விக்கும். ஆன்ம வளர்ச்சிக்கு அநுகூலம் அளியா. குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டு வந்த செய்கைக்குச் சமானமாகி விடும். ஆதலாற் சாதனைகளின் லக்ஷியத்தை ஒருபோதும் மறத்தல் கூடாது.

முத்திக்கு முதன்மையான மார்க்கம், காமம், வெகுளி, மயக்கம் முதலியவற்றைக் களைந்தெறியக் கைகண்ட மார்க்கம், வேலனருள் வந்து தானே வெளிப்படும் மார்க்கம் எதுவெனில் அது மனத்தைத் தடுக்கும் அப்பியாசமேதான். இதனை நாம் அநுதினமும் பழகிவர வேண்டும். ஆகையாற்றான் அநுபூதிச் செல்வரான ஸ்ரீ அருணகிரிநாதர் நம்மனோர் உய்யுமாறு கருணை மேலீட்டினால்,

"தடுங்கோண் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோள் இருந்த படியிருங் கோளெழு பாருமுய்ய
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் துளைக்கவை வேல்
விடுங்கோ னருள்வந்து தானே யுமக்கு வெளிப்படுமே."

என்ற அரிய உபதேசத்தை தமது அலங்காரத்தில் வெளியிட்டுள்ளார்.

மனத்தைத் தடுப்பது சாத்தியமாதல் எளிதன்று. வைராக்கியத்துடன் அநுதினம் அப்பியசித்துவர வேண்டும். பழக்கம் முற்றமுற்ற பயன் பெறுதல் உறுதி. மனம் அடங்கி வரும்போது ஸாதகர்களுக்கு சிற்சில அபூர்வ அநுபவங்கள் உண்டாகும். ஞானோதய மேற்படும். அதன் பயனாக எல்லாவிதத் துன்பங்கட்கும் காரணமாகிய வெகுளியை யார்மாட்டும் மறத்தல் கைகூடும். கோபம் மறையவே பற்றின்மை ஏற்படும். பற்றின்மை காரணமாக தானசீலம் வளர்ந்தோங்கும். மனமானது அசல நிலையை எய்தும். முருகன் திருவருள் தானே வந்து வெளிப்படும்.

---

பாதமலர் மீதிற் போதமலர் தூவிப் பாடுமவர் தோழத் ;
பெருமயி லேறி நித்தம் வரவேணும் [தம்பிரானே

ஆகையால் மனத்தைத் தடுக்கும் சாதனேயே வீர் வார்த்த சித்திக்கு முதற் காரணமாம். முருகன் மலர்த் தாள் முனையினில் நாட்டித் திருவருள் சீக்கிரம் பெறுவோமாக! மஞ்ஞையூர்தி மகிழ்ந்தருள் புரிக!

ஓம் தத்சத் ஸ்ரீ குமரார்ப்பண மஸ்து.

---

# முழுச்சேவகன்

[திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை B.A., B.T.]

வீரஞ்செறிந்தது தமிழ்நாடு. வீரத்தில் பிறந்து வீரத்தில் வளர்ந்து வீரத்துடன் உயிர் விட்டவரும் வாழ்ந்தது நம் தமிழகம். வீரமக்களைப்பெற்ற வீரத்தாயரும் செறிந்தது நம் நாடு.

அத்தகையோர் வழிபட்டதும் வீரஞ்செறிந்த மேதக்க தெய்வமேயாகும். நமது பண்டைத்தமிழர் 'நாகரிக சின்னங்கள் காணப்படும் முஞ்சியர்தரை (வாழ்ந்துகெட்டவர் நிலம்) என்று பொருள்படும் மொஹெஞ்தாரோவில் (Mohenjh Daro) புதைபொருள் ஆய்வினர் கருத்துப்படி அம்மை அப்பர் வழிபாடே காணப்பட்டதாகும். எனவே வீரத்தமிழரின் தெய்வமும் சேவகனுர் (சே-ரிஷபம்-அகனுர்-வாகனமாக உடைய சிவனுர்) ஆகிய சேவகரே (வீரரே). இவர் மணிவாசகர்க்காக குதிரைச்சேவகனுகிய கொள்கையைத் திருவாசகம் சிறக்கப்பேசுகிறது.

திருமாலையும் சேவகன் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. "சோஅரணும்போர் மடியத்தொல்லிலங்கைக் கட்டழித்த சேவகன்" என்பதாலும், திருப்பாவையில் ஆடிக்கொடுத்த சுடர்க்கொடி. "உன்சேவகமே ஏத்திப் பறைகொள்வான் இன்றுயாம் வந்தோம்" என்றும் "சேவகமும் யாம் பாடிவருத்தமுந்தீர்ந்து மகிழ்ந்தேலோரெம்பாவாய்" என்று கூறுவதும் காண்க.

---

தாரைவடி வேலைச் சேவல்தனை யேனர்
சாரல்மற மானைச் சிந்தியேனே

நமது செந்தமிழ்த் தெய்வமாகிய முருகபிரானை அருண கிரிநாதர் 'மயூரச்சேவகன்' என்றழைக்கிறார்.

வீரர் என்பவர் ஆண்மைமிக்கவர். ஆயுதந் தாங்கினால் மட்டும் வெற்றியோ, வீரர் என்றபட்டமோ கிட்டுவதில்லை.

"வேலன்று வென்றிதருவது" (குறள்)

"வயப்படை மற்று என்பயக்கும் ஆணல்லவர்க்கு" என்றதும் சிந்திக்க. ஆயுதந்தாங்குதலோடு வீரமும் வேண்டப்படும் அவ்வகையில், ஆண்மையுள்ள வீரம் நமது குகப் பரமனக்குரியது.

"செந்தில் நகர்வாழும் ஆண்மைக்கார"
"அழகும் ஆண்மையும் உடைய பெருமாளே"
(திருப்புகழ்)

வெறுஞ்சண்டையில் வெல்பவர்வீரர். சண்டையிற் பெரியது எமன் சண்டை. அதில் வெல்பவர் சுத்த வீரர். ஆதலின் அவரே முழுச்சேவகர்.

இச்சேவகத்தன்மை நம் முருகவேளுக்குப் பரம்பரைச் சொத்து. 'கைதான் இருபதுடைய இராவணனது தலை பத்தும் கத்தரிக்கப்பேரம்பு ஒன்று ஏவிய இராகவன் சேவகமும் சிறப்புடையதேயாகும். அத்தகைய பச்சைமேனி பரந்தாமனுக்கும் மெச்சநின்ற மருகனை விளங்குபவன் நம்கந்தவேள். வீரரை வீரரேமெச்சுவரன்றோ?

இனிநங்கந்தவேளின் தந்தையும் வீரர் என்பது முன்னர் கூறப்பட்டது. நமது அருணைமுனிவர் பின்னும் கூறுவது நோக்கத்தக்கது. திரிபுரமெரிக்க மலையை வளைத்த மகாதேவரது சேவகம், பாடி மகிழற்குரியது. அம் மாதேவர்க்கு மகன் நங் கந்தப்பரமன் என்றால் 'புலிக்குப் பிறந்தது எலியாமோ'.

வீராமன் மருகனும் வீரசிவன்மகனும் விளங்கும் கந்தவேள்வீரவேட மகளையே மணந்துகொண்டதில்

---

சூடரின் வேலவ னேயுல கேழ்வலம் வருவோனே
உன தாளிணை மாமலர் தருவாயே

வியப்பு உண்டோ? வேடர்க்கு 'மறவர்' வீரர்) எனவும் பெயருண்டு. ஆகவே வள்ளியாரும் 'பருத்தமுலைசிறுத்த இடைவெளுத்த நகை கருத்தகுழல் சிவத்த இதழ் மறச் சிறுமி' ஆகினள். அவள் தனது வீரம்வெளிப்பட, வேடவனிதையர் விரும்பிப் பாவுகின்றனர். அவள் கானில் மரகதப் புனத்து இதணில் ஒவியமெனத்திகழ்கிருள். அவ்வீராங்கனையின் கணவன் முழுச்சேவகனுகிய முருகன் என்க.

வீரகுடியிற்பிறந்து வீரகுலமங்கையை மணந்து வாழ்வாரும் தமக்கென வீரமின்றி இருத்தலுங் கூடும். ஆனல் நங்குகவேளோ, கடல் கதற, அசுரர் அழிய, மலையிடியப் போரிட்ட மாவீரன்.

இவன்மெய்க்காவலாளரும் நவ வீரர் எனப் படுவர்.
'வீரராம் ஒன்பதுபேர் மெய்த்துணைக் கொண்டவனே'
(சிதம்பரசுவாமிகள்)

மேற்சொன்ன சிறப்பெல்லாங்கொண்ட முழுச் சேவகன் சிறப்பை வகுத்துக் கூறவே சேவகன் வகுப்பு பாடினர் நமது அருணகிரி நாதர்.

இதில் அவர் முழுச் சேவகன் உதவியை நாடுகிருர்; "இருண்ட மேனியும் வளைந்த பற்களும் உடைய எமன் சண்டையில் எந்த வீரனும் எதிர்க்க முடியாது. அவனது தூதர் பாசஞ்சுழற்றி கழுத்திற் சுருக்கிட்டு உயிரைக் கவர்ந்து செல்வர். ஒருவர் செய்த நல்வினை தீவினைக் கேற்ப அவர் உயிரை நல்லவழியிலாவது அல்லது கல்லும் முள்ளும் கலந்த வழியிலாவது இழுத்துப்போக வேண்டுமென்று அருமறை (சட்டம்) விதித்துள்ளது. அதனை அவர் மும்முறை நோக்கிக் கொண்டு பின் தண்டம் விதிப்பர். அவரது தொல்லையால் அறிவு தளரும்; உரை குழறும். அக்காலத்தில் அழைக்கும் ஆன்மக் குரல் கேட்டு (அஞ்சேல் என்ன) வரவேணும்," என்கிருர்.

---

அரியா பிரம புரந்த ராதியர் தம்பிரானே
மெழில்கெட நினைவு மழிந்து மாய்வதொ ழிந்திடாதோ

இவ்வகுப்பில் நம் மயில்வீரரின் மரபுமுழுதும் முப்பொருள் தொடர்பு கொண்டிருக்கும் அழகு கருதத் தக்கது.

இராகவன் சேவகம் :—(1) ஒருபது சிரம் (2) இருபது கரம் (3) உயிர் (இராவணன்) சம்மரித்தது.

சிவன் சேவகம் :—(1) பொன் (2) வெள்ளி (3) இரும்பு ஆனமுப்புரம் எரித்தது.

வள்ளியார் சேவகம் :—(1) மருவளர் அடவி (2) வனிதையர் (3) மரகத இதண் இருந்தது.

முருகர் சேவகம் :—(1) வலைகடல் (2) கிசிசரர் (3) மலை பொருத்து.

இவையனைத்தும் மும்மல நாசம் குறிப்பனவே.

| இராமர் | சிவன் | வள்ளி | முருகன் |
|---|---|---|---|
| 1. இராவணனர் (ஆணவம்) | பொன் | பரண் | கிசிசரர் |
| 2. இருபது கரம் (கன்மம்) | வெள்ளி | அடவி | கடல் |
| 3. சீதையிடம் ஆசை (மாயை) | இரும்பு | வனிதையர் | மலை |

விளக்கம் :

தலை நிமிர்தல்—ஆணவ அறிகுறி.

" அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள் ! "

முப்புரமாவது மும்மல காரியம்

அப்புரம் செற்றமை ஆரறிவாரே (திருமூலர்) வள்ளியார் விளைக்காட்டில் மாயா வனிதை யரிடையில் ஆணவப் பரணின் (தலைமிதித்து) நிற்கும் வீரமுடையார் என்க. (பாசாடவி—தாயுமானர்) அசுரர் ஆணவமுடைமைக்

---

கருத்தா வெனக்குத் திருத்தா எளித்துக்
கலைப்போ தகத்தைப் புகல்வாயே

கறிகுறி. கடல்போலப் பரந்தது கன்ம மலம். மாயையே மலையெனப்படுவது. மும்மல மறுத்து முத்தியின்ப மருளுவதே மயூரச்சேவகனுர் சேவகம் ஆகும் என்க.

☞ இனி அச்சேவகன் வகுப்பைப் படித்து மகிழுங்கள் :—

## சேவகன் வகுப்பு

இருபிறை யெயிறு நிலவெழ உடலம்
இருள்படு சொருப முடைக்கோ விடவே

இறுகிய கயிறு படவினை முடுகி
எமபடர் பிடரி பிடித்தே கொடுபோய் 1

அருமறை முறையின் முறை முறை கருதி
அதரிடை வெருவ ஒறுத்தால் வகையால்

அறிவொடு மதுர மொழியது குழறி
அலமரு பொழுதில் அழைத்தால் வருவாய் 2

ஒருபது சிரமும் இருபது கரமும்
விழ ஒரு பகழி தொடுத்தோன் மருகா

உரமது பெரிய திரிபுர மெரிய
உயர் கனகிரியை வளைத்தோர் புதல்வா 3

மருவளர் அடவி வனிதையர் பரவ
மரகத இதணில் இருப்பாள் கணவா

வளைகடல் கதற நிசிசரர் மடிய
மலையொடு பொருத மயூரச்சேவகனே 4

(அருஞ்சொல் உரை :—அதர் - வழி. ஒறுத்தால் - தண்டித்தால். ஒரு பகழி - பிரம்மாஸ்திரம். கனகிரி - பொன் (மேரு) மலை. அடவி - காடு. வனிதையர் - வேடப் பெண்கள். இதண் - பரண். நிசிசரர் - இரவில் சஞ்சரிக்கும் அசுரர்)

மயூரச் சேவகனுர் மலரடி வாழ்க

---

எரிவாய் நரகிற் புகுதா தபடிக்
கிருபா தமெனக் கருள்வாயே

# செய்ந்நன்றி யறிதல்

[புலவர்—'அரசு']

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'—திருவள்ளுவர்.

ஒரு நாள் நண்பரொருவருடன் உரையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது, அவர் ·படியாள் வந்தான். அவனைப்பார்த்தவுடன் அவர்கண்கள் சிவந்தன! உடல் துடித்தது!

'நன்றிகெட்டவனே! இனி இங்கு வரவேண்டாம். இன்றோடு உன்னை வேலையிலிருந்து விலக்கிவிட்டேன் எனக்குச் சேரவேண்டிய நூறு ரூபாவைக் கொடுத்து விட்டுப்போ'

இவ்வாறு அவர் இரைந்தார். அவன் நடுங்கிக்கொண்டு நின்றான். மேலும் அவர், 'நேற்றே நெல்லறுக்க ஆளழைத்து வருவதாகப்போனாய். முந்திய நாள் போனவன் இப்போதுதான் எட்டிப் பார்க்கிறாய். நான் நேற்று நெல்லறுத்திருப்பாயென்று நினைத்தேன். பட்டணம்போய் இன்று காலையில் வந்து பார்த்தேன். நெல்லறுக்கக்காணோம் ஆனால் ஒரு மூலையில் ஒரு கலநெல்லுக்குப் பிசைந்து கொண்டுபோய் விட்டார்கள் பாடுபட்டவர்கள். நீயோ இப்போதுதான் துரைமாதிரி ஆடி அசைந்துகொண்டு வருகிறாய்.' என்றார்.

அவன் வாய்குழற, 'முந்தாவது நாள் ஊட்டுக்குப் போனதும் என் தங்காச்சி செத்துப்போனதா சேதி வந்து துங்க ஓடிப் பூட்டேன். இப்பதாங்க வரேன். ஆளுங்க நாளைக்கு வரேங்கராங்க. நெல்லு பிசைஞ்சவுங்களையுங் கண்டு பிடிகசுடரேனுங்க. நானு ஊர்லே யில்லேண்ணு

---

ஏழ்நரகிற் சேருமழற் காயனையிட்
சோதியொளிப் பாதமளித் தருள்வாயே

தெரிஞ்சுகிட்டுதாங்க அந்த நாயுங்க நெல்லைக் கொண்டு பூட்டானுங்க' என்றான்.

நண்பருடைய சீற்றம் தணிந்தது. அவர் சிறிது முன் கோபக்காரர். அவன் கூறிய சமாதானத்தால் அமைதியுற்றார். 'சரி, முதல் நெல்லைக் கொண்டுபோனவர்களைக் கண்டுபிடி. கண்டுபிடிக்கா விட்டால் உன் படியிற்பிடித்துக்கொள்வேன். போ! நாளைக்குக் கண்டிப்பாக நெல்லை அறுத்துவிடவேண்டும்' என்றார். அவன்போய் விட்டான்.

நான் என் அலுவலகம்போகப் புறப்பட்டேன். என் சிந்தனையில் நண்பர் கூறிய, 'நன்றிகெட்டவன்' என்ற சொல் ஊறிக்கொண்டிருந்தது. நன்றியென்பது நன்மை. நமக்கு ஒருவர் செய்த நன்மையை மறப்பது நன்றிகெட்ட செயல். என் நண்பர் அவருக்குப் படியாளாக இருப்பவனுக்கு நூறு ரூபா கொடுத்திருக்கிறார். அந்த ரூபா கொடுக்கும்வரை அவர் சொற்படி அவன் நடந்தாகவேண்டும். அவரிடம் வேலைசெய்யமுடியா விட்டால்—பிடிக்கா விட்டாலும் சரி—பணத்தைக்கொடுத்து விட்டுத்தான் வேறிடம் போகவேண்டும். அவன் நூறு ரூபாவுக்கு அடிமையானான். முற்காலத்திற் பணங்கொடுத்து விலைக்கு வாங்கும் அடிமையை நடத்தும் அத்துணைக்கொடுமையில்லாவிடினும் இந்த அடியான் தன் தலைவனுக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்கவேண்டும்.

அவனின்றி அவன் தலைவரின் அலுவல் அணுவளவும் அசையாது. தன் தங்கையின் சாவுக்குப்போய்விட்டான் அவன். நண்பரோ என்னுடன் சென்னைக்குப் படம் பார்க்க — இன்பமாக உலாவ — என்னுடன் பொழுது போக்க—வந்து விட்டார் எனவே, அவர்வேலை அணுவும் அசையாமல் நின்றுவிட்டது. இவ்வாறு அவனின்றி வாழ முடியாத அவர் அவனை 'நன்றிகெட்டவனே' என்றழைக்கிறார் நிற்க,

---

இரவு பகற் பலகாலும், இயலிசைமுத் தமிழ்கூறித்
திரமதனைத் தெளிவாகத் திருவருளைத் தருவாயே

வியத்தகு உலகம்! உள்ளத்திலடங்காத ஓவிய அழகு மலிந்த உலகம்! நமக்குப் பயன்படும் எவ்வளவோ இயற்கைப் பொருள்களடங்கிய, நலம் நிறைந்த உலகம்! அறிவால் அறுதியிட முடியாத, பரந்த, வளஞ்செறிந்த, வண்மை நிறைந்த இவ்வுலகத்தில் நாம் வாழ்கிறோம். இவ்வுலகையும், உலகில் நிறைந்த பொருள்களையும், பொருள்களைப் பயன்படுத்திக் கொள்ளும் அறிவையும், நினைக்கும் மனத்தையும் நாம் பெற்றிருக்கிறோம. இந்நிலையை இன்னிலையாக நமக்குக்கொடுத்தவர் கடவுள். கடவுள் அளிக்காமல் இயற்கையாகவே வந்தனவா இவைகள்? நூறு ரூபாவுக்கு விரட்டுகின்றார் நண்பர். ஆனால், அவனின்றி அவரால் வாழமுடியாது எனினும், அச்சுறுத்துகிறார். அவனும் அஞ்சுகிறான். ஆனல், நினைவுக் கடங்காத இத்தகைய அழகிய உலகைப் பேரருளுடன் படைத்துக் கொடுத்த எல்லாம் வல்ல இறைவருக்கு நாம் எவ்வகையிற் கட்டுப்படாதிருக்க முடியும்?

நமக்குக் காலத்தினாலும், பயனை எதிர்பார்க்காமலும், நாம் செய்யாமலிருந்தும் நன்மை புரிவோரை மறவாமல் அகத்திலிருத்தல் வேண்டுமென்பார் வள்ளுவர். எல்லாம் வல்ல இறைவர் நமக்குச் செய்திருக்கும் நன்மைகளை நினைத்தோமானல் மெய் சிலிர்க்குமன்றோ! அளவிலடங்காத அந்த நன்மைகளை அளித்த கடவுளை அவரருளாலே வாழும் நாம் மறப்பது எங்ஙனம்? மறத்தல் இயலாது.

தாயுந் தந்தையும் உறவும் நட்பும் பிறவுமாகி யுறுதுணை புரியும் ஒப்பற்ற பரம்பொருளின் அருளை மறவாத நிலையில் நாம் அவருக்குச் செய்யவேண்டிய கைம்மாறும் உண்டோ? விருப்பு வெறுப்பற்ற அவர் நம்முடைய கைம்மாற்றை எதிர்நோக்குகிறாரா? மனமொழி மெய்களைக் கடந்த அவருக்கு நம்மாற் செய்யத் தக்கதுதான் உண்டா? உண்டு.

---

அருண கிரிவாழ் பெருமானே—அடிமை கொடுநோய்
பொடிகள் படவே ஒருவர் பரிவாய் மொழிவாரோ

'அவரருளாலே அவர்தாள் வணங்குவதுதான் நன்றி மறவாமை' யென்பர் பெரியோர். ஆம், அதுதான் நன்றி மறவாமை. ஆனல், வணங்குவது எங்ஙனம்? தாயுமான வரின் தண்ணளியை நினைந்து நினைந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகுவதுதான் வணங்கும் முறை. நாம் செய்த தவறுகளைச் சிந்தையிலே கொணர்ந்து, தவறு செய்தமைக் கிரங்கி மன்னிக்குமாறு வேண்டிக்கொள்வது தான் வணங்கும் முறை.

இறைவரை வழிபடும் இடம் எது? 'உள்ளும் புறமுங் கசிந்தூற்றெழ நெக்குடைந்து குதிகொள்ளுஞ் செந்தே றலைப்புறத்திலே வணங்குவதைவிட அகத்திலே வணங்கு வது மிகவுஞ் சிறப்புடைத்து. காடவர் கோன் கட்டிய வெளிக்கோயிலினும் பூசலார் கட்டிய அகக் கோயிலே பெருமானர் விருப்பத்திற் குரியதாயிற்று.

வெளிக்கோயிலைப் பணத்தாற் கட்டிவிட முடியும்; உடலுழைப்பு மட்டும் அக்கோயிலுக்குப் போதும். அகக் கோயிலுக்குப் பொன்னும் பொருளும் வேண்டா; எண்ணும் தூய்மையும் வேண்டும்.

நாம் திருக்கோயிலுக்குச் செல்லும்போது உடலும் உடையுந் தூயராகச் செல்கிறோம். திருக் கோயிலுந் தூய தாக அலகிட்டு, விளக்கிட்டு, மலர் முதலிய அணியிட்டு இருந்தால் மகிழ்வுடன் வணங்கி வருகிறோம். திருக் கோயிலிலே தவறு செய்வதைக் கண்டிக்கிறோம்; அங்கங்கே குப்பை கூளங்களைக் கண்டால் வருந்துகிறோம்; கும்பல் கூடி வீணுரை யாடுவோரை வெறுக்கிறோம். ஏனெனில், அது இறைவர் இறைகொண்ட தூய இடம்; பரம் பொருளைப் பணிவதற்காகப் பகரும் நூன் முறைப்படி வகுத்த இடம். அங்கே தவறு செய்தல் பெரும் பாவம்.

இவ்வாறு புறத்திலே வழிபடும் நாம் நம்மகத்திலேயும் அவ்வாறே வழிபடுவதுதான் ஏற்றது. புறவழிபாட்டை

---

இருவினை யஞ்ச மலவகை மங்க
கடுகி நடங்கொ டருள்வாயே

மட்டுந்தான் இறைவர் விரும்புகின்றனரா? அகவழிபாட்டையும் விரும்புகிறார். என்! அகவழிபாட்டை மட்டும் விரும்புகிறார் என்பதும் ஏற்புடைத்து.

அகவழிபாடே இறைவர்க்காம் வழிபாடு. அவ்வழிபாட்டைச் செய்யுமுன் அகத்தைப் புறம்போலவே தூய தாக்கிக் கொள்ளுதல் வேண்டும். நம் உள்ளமோ, 'கரு முதல் தொடங்கிப் பெருநாள் எல்லாம்—காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனும்—தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்தது' அன்றோ? அவற்றை முதலில் அலகிட்டு அரிதின் அப்புறப்படுத்த வேண்டும். பிறகு, கருநிற முடைய மதம்பிடித்த ஐம்புலக் கடாக்களின் கட்டை அவிழ்த்து வெளிப்படுத்த வேண்டும். தூய அன்பால் மெழுக வேண்டும். இறைவனருளாகிய விளக்கை ஏற்ற வேண்டும். ஏற்றியவுடன் துன்ப இருள்தானே தொலைந்து அகம் ஒளிபெறும்; மேலும், உண்மையாகிய விதானத்தை விரித்துப் பேரருளாளராகிய இறைவருக்கு நம் உள்ளத் தாமரையை இருப்பிடம் ஆக்குதல் வேண்டும்.

இவ்வாறு நம் உளத்தைத் தூய தாக்கினால் இறைவரும் இனிது அமர்வார். அறிவில்லாத ஒழுக்கமும், பொய்யும், பிணித்தொகையும் துன்பக் குவியலும் போன்ற சரக்குகளை ஏற்றி வினையாகிய கப்பலோட்டியாற் செலுத்தப்பட்டு 'கரு' என்னும் பெருநகரில் இருந்து பிறவியெனும் பெருங் கடலில் நுழைந்து, புலன்களாகிய சுறுமீன்கள் அலைமோதிப் பின்தொடர, அலைகளால் ஒற்றுண்டு வரும் நம் மெய்யாகிய கப்பல், தான் செல்லும் திசையை மறந்து குடும்பமாகிய பாறையில் மோதி, நிறையாகிய கூம்பு முரிந்து, உணர்வாகிய பெரிய பாய் கிழிந்து, கலங்கிக் கவிழாமல் இறைவருடைய திருவடியாகிய பேரின்ப நகரிருக்கும் கரையை அடையும்.

இவ்வழிபாடு நம்மால் இயலுமா? இயன்றாலும்

---

முனிவர் சுரர் தொழுதுருகு
பாத பத்மமென்று மறவேனே

இயலாவிடினும் இறைவர் விரும்பும் வழிபாடு இதுவே யென்பது இனிதமர்ந்து சிந்தித்தால் விளங்கும். மாணிக்க மும் வயிரமும் போன்ற காணிக்கைகளைவிட அன்புமலர் ஆயதாக எங்கும் ஒரே நிறைவாக—எல்லா வுயிர்களினிட மும் இருக்குமாறு—இருத்தல் வேண்டும். ஈண்டுக் கூறிய தூய நிலையில் இருந்து,

"சண்முகத்தாய்! சரவணத்தாய்! சார்பளித்தாய்! சாரும்
 தகைமைத்தாய் உளபதத்தாய்! சரணளித்தாய்! இன்பப்
பண்முகத்தாய்! பரிவளித்தாய்! பரிசளித்தாய்! மேலாம்
 பாவளித்தாய்! பண்ணளித்தாய்! படிப்பளித்தாய்! நாயேன்
எண்முகத்தாய் வாயிருந்தாய்! எளியருக்காம் விருந்தாய்!
 ஈராறு கைத்தலத்தாய்! இணையில்லா நற்றாய்!
விண்முகத்தாய் விண்ணவர்க்காய் வேலெடுத்தாய்! நின்னை
 மெய்ம்மறந்த நிலையினிலும் மெய்மறக்கிலேனே!"

என வாழ்த்தி வாழ்வோம்.

---

# ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்

10-ஆம் பை

## V. S. வேங்கடராமன்.

## "ஆய்ச்சியர் அன்பும் பெருமையும்"

(அ) ஓர் ஆய்மகள் (இடைச்சி) கண்ணன் கழலிலீடு பட்ட மனமுடையவளாகித் தயிர், வெண்ணெய், நெய், பால் முதலானவற்றைத் தனித்தனிக் கலயங்களிலிட்டுக் கூடையைத் தலையில் வைத்துக்கொண்டுத் தன் வீட்டு வாயிற்படி தாண்டிப் பண்ட மாற்றுக்குக் கூவுவாளாகிக் குரல் எடுத்தாள். தயிரோ ஒ ஒ தயிர்? என்பதற்குப் பதிலாகக் கோவிந்தா கோவிந்தா என்றாள். வெண்ணெய் வெண்ணெய் என்பதற்குப் பதிலாக தாமோதர தாமோதர தாமோதரா என்று பாட ஆரம்பித்தாள். நெய்யோ நெய் என்

---

தருண மணிபொழி வருணை நகருறை
 சயில மிசையினில் வரவேணும்

பதற்குப் பதிலாக மாதவ மாதவா என்று பாடினாள். அவ்வாய் நங்கை கண்ணனிடங் கொண்ட மோகம் ஆர்க்கு வரும்.

(ஆ) ஓரிடைச்சியின் வீட்டுக்குக் கண்ணன் சென்றார். அவ்வீட்டுத் தூண்கள், மாணிக்கத் தூண்கள். அருகிலிருக்கும் இரத்தினத் தூணில் அப்போது வந்த கண்ணனின் திருவுருவம் பிரதிபலித்தது. கண்ணனைப் பார்த்ததும் அவ்விடைச்சி வெண்ணெய்ச் சட்டியிலிருந்தும் வெண்ணெயுருண்டை முழுதும், எடுத்து ஓடி வந்தாள். இரண்டு கிருஷ்ணர்கள் கண்களுக்குத்தோன்ற அந்த ஒருருண்டையை இரண்டாகப் பகிர்ந்தாள். வெண்ணெய் தின்று முடிக்கும் வரையிலாவது திடீரென வெளியே ஓடிப் போகாமல் இருப்பானே என்பது அவள் எண்ணம். அதனோடு நிழல் கண்ணனையும், நிசக் கண்ணனாகவே நினைத்தது அவளது பக்தி பரவசம்! அப்படி மெய்ம்மறந்த பேரன்பு புண்ணியவான்கட்கே கிடைப்பது.

(இ) பாலகிருஷ்ணன் ஓரிடைச்சியினிடம் அவள் உட்கார்ந்து பதுமாசனத்தே இருக்கும்போது அவள் கொஞ்சிக் குலாவப் பக்கத்தே சென்று அவ்விடைச்சியின் வாசநாறும் வாயினை முகர்ந்து பார்க்கலானார். அவள் குழந்தை என்ற பாவனையோடு முத்தமிட அருகே அமர்ந்த ஆய் மகளிரும் பல முத்தந் தந்தனர். கண்ணனும் அவர்கள் கழுத்துக்களைப் பிடித்துக்கொள்ள அவரெல்லாரும் மேனி சிவக்க இறுகக்கட்டித் தழுவி மகிழ்ந்தனர். அம்மாதர்களுடைய பதுமாசன நிலையில் கண்ணனும் ஆசைப்பட்டு மடியில் தாவக் கையை வைக்கவே அம்மகளிரும் கண்ணனை மடியிலிருத்துக் கொஞ்சி மகிழ்ந்தனர். குழந்தையாகவேயிருந்து அந்நங்கையரது வாய் முத்தமும் ஆலிங்கனமும் மடியமர்தலும் பெற்ற போக்கிரிக் கண்ணபிரானது மாயசாலங்களை அவர்கள் கண்டனரா? இவர் தான் மாமாயனல்லரோ!

---

நாளுப வாத மேலாக ஆக
நாடோறும் வாடிம யங்கலாமோ

(ஈ) யசோதை தினமும் அதிகாலையில் கண்ணன் துயிலும் அமளியின் பக்கத்தே சென்று குழந்தை! எழுந்திரு, எழுந்திரு. பொழுது விடிந்ததடா. நீ ஆயிரம் வருடம் ஆயுசோடிருக்க வேண்டும். கிருஷ்ணா, கிருஷ்ணா எழுந்திரு என்று சொல்லி எழுப்பிக்கொண்டே பொய்த்துயில் புரியும் புன்னகை முகத்தைப் பார்த்துக்கொண்டே நெடுநேரமளவும் மகிழ்ந்து விடுவளாம். என்னே அவளது ஈடுபாடு.

(தொடரும்)

---

ஜயந்திபுரம் என்ற திருச்செந்தூர் ஸ்ரீ முருகப்பெருமானை ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் பல நூற்றாண்டுகளுக்கு முன் வட மொழியில் 33 பாடல்களால் புஜங்க ஸ்தோத்திரம் என்று பாடியுள்ளார்கள். அவைகளை பக்தர்கள் அனைவரும் படித்துப் பயனடையும் வண்ணம், இனிய தமிழில் இயற்றி, விளக்க உரையுடன் கூடியது இவ்வரிய புத்தகம். நித்திய வழி பாட்டுக்குச் சிறந்தது. பக்தர்கள் பயன் படுத்திக் கொள்ளுவார்களாக.

கிடைக்குமிடம் :— நிர்வாக அதிகாரி

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம், திருச்செந்தூர்.

விலை அணா 3 (அணா 4 தபால் பில்லைபாகவும் அனுப்பலாம்)

---

## சந்தா அறிக்கை.

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருட சந்தா ரூ 1-8-0 மார்கழி மாதம் முடிவதற்குள் மணி ஆர்டர் மூலம் செலுத்தவும். ஆயுள்சந்தா ரூ 25-0-0.

---

வீடுதவி யாளவெற்றி வேல்கரம தேயெடுத்து
வீறுமயில் மீதிற்று வருவாயே

ஆயுர்வேதவித்வான் B.V. பண்டிட்ஸ்
'சத்வைத்யசாலை' நஞ்சன்கூடு

I.D.L.21 ஸ்வாஸ்கோ கிருமல், காசம் சுவாச வியாதிக்கு
I.D.L.72 ஹார்டோன் ஹிருதய வலி, மயக்கம், துடிப்புக்கு
I.D.L.75 டீப்சன் ஜீரண உபாதைக்கு
I.D.L.99 ஜ்வரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்

I.D.L.71 பிமெலெக்ஸ் ரத்த, பல விருத்திக்கு
I.D.L.97 ஹிஸ்மெனு பலஹீனம் மயக்கத்திற்கு
I.D.L.81 ப்ரதமென்ஸ் ருதுக உபாதைக்கு
I.D.L.91 யூடிரல் கெர்ப்பாசய டானிக்
I.D.L.96 டோனடெல் ஜீர்ண விருத்திக்கு

I.D.L.12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
I.D.L.18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
I.D.L.15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
I.D.L.31 சிசுராக் ஜீர்ண டானிக்

அவசிய தின உதவிகள்
"நஞ்சன்கூடு பல்பொடி" I.D.L.61 (ரெடிஷேப்)
பயோரியா, மற்ற பல் உபாதைகளுக்கு
I.D.L.78 கூலெக்ஸ் உஷ்ண, சமன தைலம்
I.D.L.55 ஜிஞ்சிப் அஜீரண, பித்த சமனி
'யூனிகான்' சுத்த தேன்

தபால் சில்லேயும், தங்கள் விலாசமுள்ள கவருடன் வியாதி விபரம் எழுதி, எங்கள் வைத்தியரால் தபால் மூலம் சிகிச்சை பெறவும்

யுனைடெட் கன்ஸர்ன்
54, பந்தர் தெரு :: மதராஸ்.1

சத்திநீ தயவுநீ
தயங்குசங்கி னோசைநீ
சித்திநீ சிவனுநீ
சிவாயமா யெழுத்துநீ
முத்திநீ முதலுநீ
மூவரான தேவர்நீ
அத்திபுர முமுமுமே
யறிந்துணர்ந்து
கொள்ளுமே

(சிவ வாக்கியர்)

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
பொடி
நெ. 1506



ஷண்முகம் பிராண்டு

ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்

நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக
உறுதியானதும் உத்திர
வாதமுமான சரக்குகள்.

சி. ஞானசுந்தர நாயகர்

341, எஸ்பிளனேட், சென்னை–1.
ஷோ ரூம்: 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.,

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூல வீதி, - மதுரை.

TEL:—"FAITH" ESTD:—1924. PHONE:—113

நீங்கள் விரும்பக்கூடிய உயர்ந்த
உண்மையான ரகங்கள், பல
வகை பட்டு, நூல் ஆடை
களுக்கு கியாதிபெற்ற
நம்பிக்கையான
இடம்

கருப்பண்ண முதலியார் ஸ்டோர்ஸ்

பட்டு அண்டு கைத்தறி ஜவுளி வியாபாரம்

53, கிடங்கு தெரு, மதராஸ் - 1.

Printed by T. Iyaswamy, Manager Haddon & Co.,
49, Badrian St., Madras 1. Phone No. 55044.
Edited & Published by S. Muthuswamy, 54, Bunder St., Madras,